**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.232/2020**

2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.07.2025 | தகப்பனார் பெயர்: | அரங்கசாமி |
| பெயர்: | மகேஷ்<br>(PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | அள்ளிவிளாகம் | சமயம்: | |
| தொழில்: | பேராசிரியர் | வயது : | 47/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 10.07.2025</u>**

1. தாவா சொத்து என்பது நான்கு சர்வே எண்களுக்கு தாக்கல் செய்யப்பட்டது. நான்கு சர்வே எண்களும் சேர்த்து மொத்தமாக 4 ஏக்கர், 68 செண்ட் மற்றும் 33.5 ஏர்ஸ் இருக்கும். சர்வே எண்.75/1–க்கு நான்கெல்லை எனக்கு சொந்தமான புஞ்சைக்கு மேற்கு, இளங்கோவன் புஞ்சைக்கு கிழக்கு, சர்வே எண்.2 சொத்திற்கு மேற்கு, சர்வே எண்.75/4–க்கு வடக்கு. சர்வே எண்.75/3–க்கு நான்கெல்லை திரிபுரசுந்தரி புஞ்சைக்கு மேற்கு, பெருமாள் புஞ்சைக்கு தெற்கு, சர்வே எண்.75/4–க்கு வடக்கு, சர்வே எண்.75/2–க்கு கிழக்கு. சர்வே எண்.75/2–க்கு நான்கெல்லைகள் சரஸ்வதி புஞ்சைக்கு தெற்க்கு, சர்வே எண்.75/4–க்கு வடக்கு, சர்வே எண்.75/1–க்கு கிழக்கு, சர்வே எண்.75/3–க்கு மேற்கு. சர்வே எண் 75/4–க்கு நான்கெல்லைகள் வாய்க்காலுக்கு வடக்கு, சர்வே எண்.75/1, 75/2ற்கு தெற்கு, சர்வே எண்.75/1 மற்றும் திரிபுரசுந்தரி புஞ்சைக்கு கிழக்கு,

2. நான் எனது வழக்குரையிலேயோ, வா.சா.ஆ.1 ஆவணத்திலேயோ மேற்கண்டவாறு நான்கெல்லைகள் கூறியுள்ளேனா என்றால் வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். நான் வருவாத்துறை

ஆவணங்களின் உள்ள படிதான் நான்கெல்லை கூறியுள்ளேன். பூமியில் என்ன இருக்கிறதோ அதன்படி நான்கெல்லைகளை எனது பிராதிலோ, வா.சா.ஆ.1 ஆவணத்திலேயோ கூறவில்லை என்றால் சரிதான். பொதுவாக பூமியில் என்ன இருக்கிறதோ அதன்படிதான் நான்கெல்லை சரியாக இருக்கும் என்றால் ஆவணத்தின் அடிப்படையில் தான் பதிவு செய்யப்பட்டது அதனால் அதில் உள்ளதை தான் நான் குறிப்பிட்டேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.